# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்
முனைவர்.அ.ரேவதி

தமிழர் மரபும் வாழ்வியலும்
பொ. அகத்திய பாலா

தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்
முனைவர் வ.மோகனப்பிரியா

பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி
வே.வெ.சுஜாதா

கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்
மேபல் சுபிதா த.

பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்
ர.கிருஷ்ணவேணி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# தமிழ்

# தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்

## *Mathematical Elements Revealed in Tamil language*

***Dr. A. Revathi,*** *Associate Professor (Tamil), Saveetha College of Arts and Science Chennai.*

***Abstract:***

*There has been a connection between the Tamil language and mathematics since ancient times. Tamils considered mathematics as their own and associated and bound accounting with their lives. It can be seen that not only poets including the mathematician Kani Medaviyar and Kaniyan Poongundranar, but also ordinary people were knowledgeable in mathematics. It is astonishing to see that Tamils were at the peak of mathematical knowledge back then, compared to today's era, which has seen rapid growth in mathematics. Starting from a simple understanding of Pythagoras' theorem to the precise calculations of pumpkin seeds, the mathematical sophistication of the Tamils is immense. This article is designed to reveal some of that sophistication.*

***Key Words:*** *Mathematics, Tamil, Numbers, Subtle Feelings*

**முனைவர்.அ.ரேவதி,** *இணைப்பேராசிரியர் (தமிழ்த்துறை),சவீதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,சென்னை.*

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டையகாலம் தொட்டே தமிழ் மொழிக்கும் கணிதத்திற்கும் ஒரு பிணைப்பு இருந்தே வந்துள்ளது. தமிழர்கள் கணிதத்தைத் தம் கண்ணுக்கு நிகராக கருதி கணக்கியலைத் தங்கள் வாழ்வோடு இணைத்தும் பிணைத்தும் வைத்திருந்தனர். கணி மேதாவியார், கணியன் பூங்குன்றனார் உள்ளிட்ட புலவர்கள் மட்டுமின்றி சாதாரண மக்களும் கூட கணிதவியல் அறிவுடன் திகழ்ந்தமையைக் காண முடிகிறது. கணிதத்தில் அதிவேக வளர்ச்சியை எட்டிய இன்றைய காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் தமிழர்கள் அன்றே கணித அறிவில் உச்சம் பெற்றிருந்தமையைக் காணும் போது வியப்பு மேலிடுகிறது. பித்தாகரஸ் தேற்றத்தின் எளிய புரிதலில் தொடங்கி பூசணிக்காயின் விதைகளைத் துல்லியமாகக் கணக்கிட்டறிந்த தமிழரின் கணிதவியல்நுட்பம் அளப்பறியதாயுள்ளது. அத்தகைய மதிநுட்பத்தின் சில துளிகளை வெளிக்கொணரும் விதமாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** *கணிதம் , தமிழ், எண்கள், நுட்பமான உணர்வுகள்*

**முன்னுரை**

தொன்மையான தமிழ்மொழி இன்றளவும் கன்னித்தமிழாய்த் திகழ்ந்து வருகிறது. பண்டைய இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. எள்ளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் போல பாடுபொருளை மையமாகக் கொண்டு எழுந்த இலக்கியங்கள் கொண்டே இலக்கணங்கள் இயற்றப்பட்டன. தமிழ் மொழி உணர்வுப் பூர்வமான மொழியாகத் திகழ்ந்து வரினும் நம் முன்னோர்கள் பல்துறை அறிவுபெற்றவர்களாகவே விளங்கினர். அதிலும் நம் தமிழர்கள் கணிதவியல் அறிவில் உச்சத்தில் இருந்தனர் என்றே கூறலாம். பயிலும் கலைகள் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குவது எண்களே என்றும் , எண்கள் இல்லாமல் உலகில் எச்செயல்களும் நடைபெறுவதில்லை என்றும், நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் நம் முன்னோர்கள் எழுத்தை விட எண்ணுக்கே முதலிடம் தந்துள்ளனர். அத்தகைய தொன்மை வாய்ந்த நம் தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**எண்ணுப்பெயர் நூல்கள்**

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் 1** என ஔவையாரும்,

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழும் உயிர்க்கு 2** என வள்ளுவரும் எண்ணினைச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகள் கூட எண்ணிக்கையை உணருகின்றன. (விலங்குகள் தன் குட்டிகளில் ஒன்று காணாமல் போய்விட்டால் தேடுவதைக் காணலாம்) எண்களின் சிறப்பை உணர்ந்தே நம் முன்னோர்கள் தமிழ் நூல்களுக்கு எட்டுத்தொகை ,பத்துப்பாட்டு என்றும் அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது என்றும் எண்ணுப்பெயரிட்டு மகிழ்ந்தனர். தமிழ் எண்களின் எண்ணிக்கையையும் வகுத்து வைத்துள்ளனர்.

**தமிழ் எண்களின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| 1 | ஒன்று | க |
| 2 | இரண்டு | உ |
| 3 | மூன்று | ௩ |
| 4 | நான்கு | ௪ |

| | | |
|---|---|---|
| 5 | ஐந்து | ரு |
| 6 | ஆறு | சா |
| 7 | ஏழு | எ |
| 8 | எட்டு | அ |
| 9 | ஒன்பது | சு |
| 10 | பத்து | ய |
| ••• | ••• | ••• |

**தொல்காப்பித்தில் எண்ணுப்பெயர்கள்**

தொல்காப்பியம் எண்ணுப்பெயர்களின் புணர்ச்சி பற்றி விரிவாகப் பேசுகிறது. அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு காணலாம்.

பத்தின் முன் இரண்டு

**பத்தனொற்றுக்கெட னகாரம் இரட்டல்**

**ஒத்த தென்ப இரண்டுவரு காலை 3**

பத்து + இரண்டு

பத் த் + இரண்டு

பத்தன் ஒற்று கெட னகாரம் இரட்டல்

த் கெட்டது

ப + இரண்டு

னகாரம் இரட்டல்

ப ன்ன் + இரண்டு

ன்+இ = னி

பன்னிரண்டு என்று புணர்ந்தது

ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர்

**அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி**

**ஒத்த எண்ணு முன்வரு காலை 4**

ஆயிரம் + ஒன்று

அத்து சாரியை பொருந்தி வரும்

ஆயிரம் + அத்து + ஒன்று

மகரம் கெட்டது

ஆயிர + அத்து + ஒன்று

ஆயி ர் + அ + அத்து + ஒன்று

அத்தி னகர மகரமுனையில்லை

ஆயிர் + அத்து + ஒன்று

ஆயிரத்து + ஒன்று

ஆயிரத் + த் + உ + ஒன்று

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

ஆயிரத் + த் + ஒன்று

த் + ஒ = தொ - உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

ஆயிரத்தொன்று

என்று புணரும்

**ஆயிரம் வருவழி யுகரங்கெடுமே 5**

ஏழு + ஆயிரம்

ஏழ் + உ + ஆயிரம்

உகரம் கெட்டது

ஏழ் + ஆயிரம்

ழ் + ஆ = ழா - உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே


ஏழாயிரம் என புணரும்

**போதையனார் கண்டறிந்த கர்ணம் 6**

பித்தாகரஸ் தேற்றத்தை பயன்படுத்தி முதலில் கர்ணம் கண்டறிதலைக்

காணலாம்

கொடுக்கப்பட்ட செங்கோண முக்கோணத்தில்




செங்கோண முக்கோணம்

*AB=4 செ.மீ என்க, AC=3 செ.மீ என்க,*

*BC=?*

**ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ணத்தின் வர்க்கமானது மற்ற இரு**

**பக்கங்களின் வர்க்கங்களின் கூடுதலுக்கு சமம் -பித்தாகரஸ்**

கர்ணம்$^2$ $(BC^2)=AB^2+AC^2$

$=4^2+3^2$

$=16+9$

$=25$

கர்ணம்$(C)$ $=\sqrt{5*5}$

$=5$ செ.மீ

இந்திய (தமிழ்) கணிதவியலார் போதையனார் கோட்பாட்டை பயன்படுத்தி


கர்ணம் கண்டறிதலை இப்போது காணலாம்.

**ஓடும் நீளம் தனை ஒரேஎட்டுக்**

**கூறு ஆக்கி கூறிலே ஒன்றைத்**

**தள்ளி குன்றத்தில் பாதியாய்ச் சேர்த்தால்**

**வருவது கர்ணம் தானே - போதையனார்**




$(a - (a/8)) + (b/2) = c$ என்பதே அந்தப் பாடல் சொல்லும் சமன்பாடு. நீளமான பக்கத்தை எட்டாய்ப் பிரித்து, அதில் ஏழு கூறுகள் நீளத்தை எடுத்துக் கொண்டு, அதனுடன் உயரத்தில் பாதியைக் கூட்டினால் கிடைப்பது கர்ணத்தின் நீளம். 4-ஐ எட்டாகப் பிரித்தால் 0.5. அதைக் கழிக்க 4 — 0.5 = 3.5. அதனுடன் உயரத்தில் பாதியை (3/2 = 1.5) கூட்டினால் 3.5 + 1.5 = 5 கிடைப்பது கர்ணம்!

இவற்றின் பொருள் செங்கோண முக்கோணத்தின், நீளத்தில் (அடிப்பாகம்) 8 பங்கில் ஒன்றைக் கழித்துவிட்டு உயரத்தில் பாதியை எடுத்து கூட்டினால் வரும் நீள அளவே கர்ணம் என்பதாகும்.

இவ்வளவு எளிமையாக கர்ணத்தின் நீளம் காணும் இக்கணித முறையைக் கொண்டுதான், அக்காலத்தில் குன்றுகளின் உயரம் மற்றும் உயரமான இடத்தை அடைய நாம் நடந்து செல்லவேண்டிய தூரம் போன்றவைகள் கணக்கிடப்பட்டுள்ளன.

போதையனார் கோட்பாட்டின் சிறப்பம்சம் என்னவென்றால், பித்தாகரஸ் தேற்றத்தைப் போல் அல்லாது, வர்க்கமூலம் (Square root) இல்லாமலேயே, நம்மால் இந்த கணிதமுறையை பயன்படுத்த முடியும்.

**பிதாகரஸ் கோட்பாட்டிற்கும் போதையனார் கோட்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்**

| **பித்தாகரஸ் கோட்பாடு** | **போதையனார் கோட்பாடு** |
|---|---|
| இக் கோட்பாட்டைடின் படி கர்ணம் அல்லது பக்கம் கண்டறிய வர்க்கம், வர்க்கமூலம் கண்டறிய வேண்டும். | போதையனார் கோட்பாட்டின் படி கர்ணம் அல்லது பக்கம் கண்டறிய பின்னக்கூட்டல் மற்றும் பின்னக்கழித்தல் தெரிந்திருந்தால் போதுமானதாகும். |

**கணக்கதிகாரம் காட்டும் கணிதவியல் நுட்பங்கள்**

**விட்ட மதனை விரைவா யிரட்டித்து**
**மட்டு நான்மா வதினில் மாறியே — எட்டதனில்**
**ஏற்றியே செப்பியடி லேறும் வட்டத்தளவும்**
**தோற்றுமெப் பூங்கொடி நீ சொல் 7**

விளக்கம் : ஆரம் = $r$ எனக் கொண்டால் ஆரத்தின் இருமடங்கு விட்டம் $2r$.

விட்டமதனை விரைவா யிரட்டித்து

$= 2r + 2r = 4r$.

மட்டு நான்மா வதினில் மாறியே $= 4r \times 4$

எட்டதனில் ஏற்றியே $= 4r \times 4 \times 8$

செப்பியடி $= ( 4r \times 4 \times 8 ) / 20$

வட்டத்தின் சுற்றளவு $= 32 / 5\ r$

$= 2\ ( 16 / 5)\ r$

$= 2\ \pi\ r$

$\pi = 16 / 5 = 3.2$ (தோராயமான மதிப்பு).

**கீற்றெண்ணி முத்தித்து கீழாறினால் மாறி**
**வேற்றையருசு தன்னில் மிகப் பெருக்கிப் பார்த்ததிலே**
**பாதித் தள்ளி மூன்றிற் பகிர விதையாகும்**
**பூசணிக்காய் தோறும் புகல் 8**

அதாவது, ஒரு பூசணிக்காயின் கீற்றுகளை எண்ண வேண்டுமாம். அதை 3, 6, 5 இவற்றால் பெருக்கி வரும் விடையைப் பாதியாக்கி, மீண்டும் மூன்றால் பெருக்கினால் விதைகளின் எண்ணிக்கை தெரிந்துவிடும்.

சான்றாக ஒரு பூசணியில் உள்ள கீற்றுகளின் எண்ணிக்கை 5 என வைத்துக்கொள்வோம். பாடலின் படி அதை 3, 6, 5 ஆகியவற்றால் பெருக்கினால் கிடைப்பது 450. அதைப்பாதியாக்கினால் கிடைப்பது 225. அதை மீண்டும் மூன்றால் பெருக்கினால் கிடைப்பது 675. எனவே, பூசணியில் உள்ள விதைகளின் எண்ணிக்கை தோராயமாக 675 என கொள்ளலாம். இவை மட்டுமல்லாமல் கணக்கதிகார வெண்பாக்களில் நேரிழையாய், முகிழ்நகையாய், ஒண்ணுதலாய் என்றெல்லாம் அழைத்து கணிதத்தைக் கற்பிப்பதிலிருந்து பெண்களுக்குக் கணிதம் கற்பிப்பதற்காகவே இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார் என அறிய முடிகிறது.

**முடிவுகள்**

காதல், வீரம் என்ற இருபெரும் உணர்வுகளின் வழி எழுந்த நம் தமிழ் மொழியானது வெறும் உணர்வு வயப்பட்ட மொழி மட்டுமன்று. மாறாக அது பல்துறை அறிவின் உச்சத்தைத் தொட்ட மொழி. நம் தமிழ் முன்னோர்கள் கணிதத்தைத் தங்கள் வாழ்வியலோடு பிணைத்து வைத்திருந்தனர். எண்களின் கூறுகள் கொண்ட கணிதமானது தமிழரின் உள்ளத்தில், உணர்வில் பிரித்தறிய முடியாமல் இரண்டறக் கலந்துதான் எப்போதும் இருந்து வந்துள்ளது. குறிப்பாக கணிதத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பானது கண்ணின் தேவை என்பதைத் தாண்டி அது மூச்சின் தேவையைப் போன்றே இருந்துள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது. இன்னும் தமிழில் உள்ள எண்ணற்ற கணிதவியல் கூறுகளை மேலாய்வு செய்வதற்கு இக்கட்டுரை வழிவகுக்கிறது.

**அடிக்குறிப்புகள்**

1. கொன்றை வேந்தன் அடி 7 பக்க எண் — 21 மின்னூல் மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் ஔவையார், பாடல்கள் மூலமும் ஆறுமுக நாவலர் உரையும் கூகுள் இணைப்பு https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0743.pdf
2. உரையாசிரியர் பொன்னம்மாள் , திருக்குறள் ,அதிகாரம் கல்வி குறள் 392 அன்னை புத்தகாலயம் , நான்காம் பதிப்பு, செப்டம்பர் 2014
3. நூற்பா 434 ,தொல்காப்பியம் எழுத்ததிகாரம் ,சேனாவரையர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், முதற்பதிப்பு 1923
4. நூற்பா 317, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் ,சேனாவரையர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், முதற்பதிப்பு 1923
5. நூற்பா 391 ,தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சேனாவரையர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், முதற்பதிப்பு 1923

6. கூகுள் இணையத்தள பக்கம் , இணைப்பு https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AF%8B%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%A9%E0%AE%B0%E0%AF%8D
7. நூற்பா 50, காரிநாயனார், கணக்கதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்
8. நூற்பா 73, காரிநாயனார், கணக்கதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்

**துணைநூற்பட்டியல்**

1. கொன்றை வேந்தன் அடி 7 பக்க எண் — 21 மின்னூல் மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் ஔவையார், பாடல்கள் மூலமும் ஆறுமுக நாவலர் உரையும் கூகுள் இணைப்பு https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0743.pdf
2. உரையாசிரியர் பொன்னம்மாள் , திருக்குறள் அன்னை புத்தகாலயம் , நான்காம் பதிப்பு, செப்டம்பர் 2014
3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் ,சேனாவரையர் உரை திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்
4. காரிநாயனார் கணக்கதிகாரம் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்

## *Bibliography*

1. *Kondrai Vendan Adi 7 Page No — 21 Minnual Madurai Tamil Literature E-Collection Project Aavaiyar Songs Sourced and Text by Arumuga Novelist Google Link* https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0743.pdf
2. *Editor Ponnammal, Thirukkural Annai Bookstore, Fourth Edition, September 2014*
3. *Tholkappiyam Ezhuthathikaram, Text by Senavarayar, Tirunelveli South Indian Saivasiddhanta Copy Publishing Association*
4. *Karinayanar Kanakathigaram Tirunelveli South Indian Saivasiddhanta Copying Society*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com